# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 11 | புவியியல்<br>பெயர் / சுட்டெண் : ...................................................... | நேரம் :<br>3.00 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.**

❖ **ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி - I

* **01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறியுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01. உலகின் மிகப்பெரிய தீவு ...................................................... ஆகும். (கிறீன்லாந்து, ஐஸ்லாந்து, மடகஸ்கார்)

02. சமுத்திரத்துடன் இணைக்கப்பட்ட கடல் ...................................................... கடல் ஆகும். (மத்தியதரைக், கஸ்பியன், ஏரல்)

03. ........................................ உருமாறிய பாறை வகையைச் சேர்ந்ததாகும். (நிலக்கரி, கருங்கல், வைரம்)

04. உலக சனத்தொகையில் ஏறத்தாள ........................................ சதவீதம் வட அரைக்கோளத்தின் நாடுகளில் வசிக்கின்றனர். (90%, 64%, 60%)

05. புவிச்சரிதவியல் கால அளவுத்திட்டத்தின்படி இலங்கையில் காணப்படும் பாறைகளில் அதிகளவான சதவீதம் ........................................ யுகத்தினைச் சேர்ந்தவையாகும். (கேம்பிரியனுக்கு முந்திய, பலியோர்சேயிக், மொசசோயிக்)

06. இலங்கையில் முற்றா நிலக்கரி (பீற்) படிவுகள் ...................................................... ல் காணப்படுகின்றன.
(எப்பாவெல, முத்துராஜவெல, புல்மோட்டை)

07. புவியின் புவியோட்டுத் தட்டுப்பரம்பலுக்கேற்ப இலங்கை ........................................ புவித்தட்டிற்கு உரியது.
(இந்து அவுஸ்திரேலிய, யுரேசியா, அந்தாட்டிக்கா)

08. இலங்கைக்குரிய கடல் எல்லையின் கீழ் விசேட பொருளாதார வலயத்திற்குரிய கடற்பிரதேசம் கடற்கரையிலிருந்து ........................................ கடல்மைல் தூரத்திற்குப் பரந்துள்ளது. (12, 24, 200)

09. இலங்கையின் வடகிழக் கரையிலுள்ள புல்மோட்டைப் பிரதேசத்தில் அதிக அளவில் ........................................ கனிப்பொருள் படிவு இருக்கின்றது. (சிலிக்கன்மணல், இல்மனைற்று, மொனொசைட்டு)

10. தென்னமெரிக்காவிலுள்ள மிகப்பெரிய மலைத்தொடர் ........................................ எனப்படும்.
(றொக்கி, அப்பலாச்சியன், அன்டீஸ்)



kalvi.lk

* **11 தொடக்கம் 20 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து, அவை சரியாயின் (ச) ஐயும், பிழையாயின் (பி) ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

11. உலகின் மிக உயர்வான சனத்தொகை வளர்ச்சி வீதத்தைக் கொண்ட நாடு நைஜீரியா ஆகும். ச / பி

12. பூகோளம் வெப்பமாதலின் விளைவாக எதிர்காலத்தில் பருத்தி ஆடைகளுக்கு உள்ள கேள்வி அதிகரிக்கலாம். ச / பி

13. அன்ராட்டிக் பிரதேசம் எக்ஸீசிமோவர்களின் தாய்நாடாக கருதப்படுகிறது. ச / பி

14. தென்னமெரிக்காவின் அமேசன் பள்ளத்தாக்கிலும் ஆபிரிக்காவில் கொங்கோ பள்ளத்தாக்கிலும் ஊசியிலைக் காடுகள் பரந்தளவு நிலப்பரப்பில் காணப்படுகின்றன. ச / பி

15. பெரும்பாலான வளர்முக நாடுகளில் குடித்தொகையின் இரட்டிப்பாக்கம் மிகக் குறுகிய காலத்தில் இடம்பெறும் போது வளர்ச்சியடைந்த நாடுகளில் நீண்ட காலம் எடுக்கின்றது. ச / பி

16. கற்கோளத்தினதும் நீர்க்கோளத்தினதும் பகுதிகள் சேர்ந்து உயிரின மண்டலத்தை அமைக்கின்றன. ச / பி

17. வட ஆபிரிக்காவில் உள்ள மிகப் பெரிய அயனமண்டல பாலைவனம் தார் ஆகும். ச / பி

18. மனிதன் வேட்டையாடுபவனாக வாழ்ந்த காலத்திலிருந்தே குடியிருப்புக்கள் ஆரம்பமாயின. ச / பி

19. இலங்கையின் சனத்தொகையின் தற்போதைய வயது கட்டமைப்புக்கேற்ப எதிர்காலத்தில் வயது வந்த சனத்தொகையில் அதிகரிப்பு ஏற்படலாம். ச / பி

20. ஒரு நாட்டில் ஒரு பிரதேசத்தில் இருந்து வேறொரு பிரதேசத்திற்கு நடைபெறும் புலப்பெயர்ச்சி அந்நாட்டின் சனத்தொகை மாறுவதில் செல்வாக்கு செலுத்துகின்றது. ச / பி

* **21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

21. கற்கோளமானது தீப்பாறை அடையற்பாறை மற்றும் .................................................................. பாறைகளைக் கொண்டுள்ளது.

22. தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளவாறு கடலில் உள்ள மிகவும் ஆழமான இடம் .............................. ................................ பாதாளமாகும்.

23. கனிப்பொருட்கள் ........................................................................ இருந்து உருவாகியுள்ளன.

24. வயது கட்டமைப்பிற்கேற்ப குடிசன அமைப்பை ஆராயும்போது, இலங்கையில் 0 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்டவர் களின் எண்ணிக்கை படிப்படியாக .................................................... கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

25. மூடுபாறை என்பது ........................................................................ கோளத்தின் ஒரு படையாகும்.

26. ............................................ ஆனது 2050 ம் ஆண்டளவில் உலகில் கூடுதலான சனத்தொகை கொண்ட நாடாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

27. புவிச்சரிதவியற் கால வட்டத்திற்கேற்ப இலங்கையின் வடமேற்கு மாகாணத்தின் தபோவ, ஆண்டிகம பிரதேசத்தில் .................................................................. காலத்திற்குரிய சுண்ணாம்புக்கல் பாறைகள் காணப்படுகின்றன.



kalvi.lk

28. கட்டமைப்பிற்கேற்ப புவியின் ஓடு சீயல் ........................................................................ என்னும் இரு படைகளைக் கொண்டுள்ளது.

29. பசுபிக் சமுத்திரம் ..................................................... கால்வாயினால் அத்திலாந்திக் சமுத்திரத்துடன் தொடுக்கப்பட்டுள்ளது.

30. உலகின் பாரிய சமவெளிகளில் ஒன்றான நுல்லாபார் சமவெளி ............................................... என்னும் கண்டத்தில் அமைந் துள்ளது.

* **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரே புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31. நிலத்தினால் முற்றிலும் சூழப்பட்ட இரண்டு கடல்கள்
1) சாக்கடல் மற்றும் செங்கடல்
2) கஸ்பியன் கடல் மற்றும் சாக்கடல்
3) ஏரல்கடல் மற்றும் செங்கடல்
4) கருங்கடல் மற்றும் கஸ்பியன்கடல் (.........)

32. கண்ணாடி உற்பத்தியில் பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் கனியமணல் பின்வருவனவற்றுள் எது?
1) மொனசைற்று
2) சிலிக்கா
3) மைக்கா
4) இல்மனைற்று (.........)

33. உலகில் மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட நகரங்கள் இருக்கும் கண்டம்
1) வட அமெரிக்கா
2) ஆசியா
3) ஐரோப்பா
4) ஆபிரிக்கா (.........)

34. பின்வரும் கூற்றுக்களில் உலக சனத்தொகை தொடர்பில் சரியானது கூற்று
1) உலக சனத்தொகையில் ஏறத்தாள 50 சதவீதமானோர் வடஅரைக் கோளத்தில் வாழ்கின்றனர்.
2) உலக சனத்தொகையில் 64 சதவீதமானோர் உலகின் மொத்த நிலப்பரப்பில் 20% ல் வாழ்கின்றனர்.
3) உலக சனத்தொகையில் நாலில்மூன்று பங்கினர் ஆசியாவில் வாழ்கின்றனர்.
4) உலக சனத்தொகையில் 60 சதவீதமானோர் பாரிய பத்து நாடுகளில் வாழ்கின்றனர். (.........)

35. முதன்முதலில் அளவுத்திட்டத்தின் அடிப்படையில் படமொன்றினை வரைந்ததுடன் 'படவரைகலையின் தந்தை' எனவும் அழைக்கப்படும் நபர்
1) குளோடியஸ் தொலமி
2) ஏராட்டோதின்ஸ்
3) அனெக்சி மாண்ட்ஸ்
4) ஸ்ராபோ (.........)

36. பூகோள நீர்ப்பரம்பல் பற்றி சரியான கூற்று
1) புவியோட்டின் 97% நீரினால் மூடப்பட்டுள்ளது.
2) நீர்க்கோளத்திலுள்ள நீர் திண்மம், திரவம், வாயு எனும் மூன்று நிலைகளில் காணப்படுகின்றது.
3) கால்வாய்கள், அருவிகள், ஆறுகள், ஏரிகள் ஆகியவற்றில் உள்ள நீர் நிலக்கீழ் நீர் எனப்படும்.
4) பிரதான சமுத்திரங்களின் பரம்பலுக்கேற்ப மிகச்சிறிய சமுத்திரம் அத்திலாந்திக் சமுத்திரமாகும். (.........)

37. தற்போது இலங்கை பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் முக்கிய இடத்தை வகிப்பது
1) சீனா 2) ஜப்பான் 3) சிங்கப்பூர் 4) இந்தியா (.........)

38. உலகின் மொத்த நிலப்பரப்பில் காடுகளின் சதவீதம்
1) 29% 2) 10% 3) 60% 4) 50% (.........)

39. இலங்கையில் சனத்தொகை அடர்த்தி குறைந்த மாவட்டம்
1) கொழும்பு 2) யாழ்ப்பாணம் 3) முல்லைத்தீவு 4) நீர்கொழும்பு (.........)

40. அத்திலாந்திக் சமுத்திரத்தையும் மத்திய தரைக்கடலையும் தொடுக்கும் தொடுகடல் (நீரிணை)
1) சுயஸ்கால்வாய்
2) ஜிபிரால்ரர் ஜிப்ரோட்டர் நீரிணை
3) டார்டனல்ஸ் தொடுகடல்
4) மெசீனா தொடுகடல் (.........)



kalvi.lk

## பகுதி - II

- ❖ **இவ் வினாத்தாள் I, II, III என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- ❖ **பகுதி I இன் வினா கட்டாயமானது. அதில் அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுகளுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**
- ❖ **பகுதி II இலிருந்து இரு வினாக்களுக்கும், பகுதி III இலிருந்து இரு வினாக்களுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.**
- ❖ **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

01. அ) உமக்கு வழங்கப்பட்டுள்ள 1 : 50000 இடவிளக்கப் படத்தைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1) படத்தில் வடமேற்கு மூலைப் பகுதியில் காட்டப்பட்டுள்ள நிர்வாகப் பிரிவு யாது? (2 புள்ளிகள்)

2) D என்னும் சதுரப் பகுதியினுள் காணப்படும் தாவர வகை எது? (2 புள்ளிகள்)

3) பிரதேசத்தில் காணப்படுகின்ற வீதி வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

4) படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் காணப்படும் வடிகாற் பாங்கினைப் பெயரிடுக. (1 புள்ளி)

5) பத்தில் C என்ற எழுத்தினால் குறிக்கப்பட்டுள்ள இடத்திற்கு குறுக்காக விரிவடையும் நெடுங் கோட்டின் பெறுமானத்தை சரியாகக் குறிப்பிடுக. (1 புள்ளி)

6) G செவ்வகப் பகுதியில் காணப்படும் பண்பாட்டு அம்சங்கள் 04 ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில், தரப்பட்டுள்ள அம்சங்களை பொருத்தமான பட வரைகலை நுட்பங்களைப் பயன்படுத்தி குறித்துப் பெயரிடுக.

1) மிசூரிமிசிசிப்பி நதி
2) கன்பரா நகரம்
3) கியூபா தீவு
4) அட்லஸ் மலை
5) ஹட்சன் குடா

(5 புள்ளிகள்)

இ) தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் பின்வரும் அம்சங்களை பொருத்தமான பட வரைகலையில் நுட்பங்களைப் பயன்படுத்தி குறித்துப் பெயரிடுக.


1) தலைமன்னார் தீவு
2) திருகோணமலை துறைமுகம்
3) ஹட்டன் சமவெளி
4) சிவனொளிபாத மலை
5) ஆனையிறவு

(5 புள்ளிகள்)



kalvi.lk

02. 1) மேலே காட்டப்பட்டுள்ள புவிப் படைப்பிரிவுகளை அதன் அமைப்பு அடிப்படையில் A, B, C என்பவற்றின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)




2) நீர்க் கோளத்தில் காணப்படும் மூன்று துல்லியமான இயல்புகளை வரிசைப் படுத்துக. (3 புள்ளிகள்)

3) மனிதனுக்கும் மற்றும் உயிர்வாழ் ஜீவராசிகளுக்கும் உயிர்க் கோளத்தின் பயன்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

03. 1) பெறுமதி மிக்க வளம் உருவாக்கப்படும் முறையினைத் தருக. (3 புள்ளிகள்)

2) வளங்களை வகைப்படுத்திக் காட்டுக. (3 புள்ளிகள்)

3) இயற்கை வளங்கள் அழிவடைந்து செல்வதற்கான காரணம் 2 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

04. 1) சனத்தொகை அடர்த்தி என்றால் என்ன? (3 புள்ளிகள்)

2) சனத்தொகையில் மாற்றத்தினை ஏற்படுத்தும் காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) ஒரு நாட்டினை விட்டு மக்கள் வெளியேறுவதற்கான பொதுவான காரணிகள் 3 ஐக் குறிப்பிட்டு 2 இனை விளக்குக. (4 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

05. 1) குடியிருப்பு என்றால் என்ன? (3 புள்ளிகள்)


2) கொத்தணிக் குடியிருப்பின் இயல்புகள் 3 ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) குடியிருப்பு ஒன்றின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் பௌதிகக் காரணிகள் 2 ஐக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)



kalvi.lk

06. தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடைகள் தருக.




1) இலங்கைப் படத்தில் 1, 2 என இலக்கமிடப்பட்டுள்ள தரைத்தோற்ற வலயங்களைப் பெயரிடுக? ( 3 புள்ளிகள்)

2) அண்சமவெளியில் காணப்படும் பொருளாதார நடவடிக்கைகள் 3 தருக? ( 3 புள்ளிகள்)

3) கரையோரச் சமவெளியில் பின்வரும் உறுப்புக்களை படத்தின் உதவியுடன் வரைவிலக் கணப்படுத்துக.

A - முனை B - குடா C - களப்பு

(4 புள்ளிகள்)




kalvi.lk

07. 1) இலங்கையில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற மாவட்டங்கள் 3 ஐக் குறிப்பிடுக.

2) இலங்கையின் நெற்பயிர்ச் செய்கையில் காணப்படும் புதிய போக்குகள் 3 ஐக் குறிப்பிடுக.

3) சேனைப் பயிர்ச் செய்கையானது பொருத்தமற்ற விவசாய நிலப்பயன்பாட்டுப் பாங்காகக் கருதப் படுவதற்கான காரணம் 2 ஐக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

08.




இலங்கைக்குரிய கடல் வளங்களையும் அவற்றிற்குரிய எல்லைகளையும் காட்டும் வரிப்படம் மேலே தரப்பட்டுள்ளது.

1) மேற்படி வரிப்படத்தில் 1, 2 என்று குறிக்கப்பட்டுள்ள இரண்டு வலயங்களையும் பெயரிடுக.

2) இலக்கம் 3 இனால் காட்டப்பட்ட வலயத்திலுள்ள பொருளாதார முக்கியத்துவத்தினைக் குறிப்பிட்டு 3 விடயங்களை விளக்குக.?

3) ஒரு நாட்டிற்கு கடல் எல்லை இருத்தல் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை 2 விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

09. 1) இலங்கையின் மீன்பிடித் தொழிலின் பிரதான இரு துறைகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2) இலங்கையின் மீன்பிடி உற்பத்தி தற்போது உயர்வடைந்து வருவதில் செல்வாக்கு செலுத்தும் 3 காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3) எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் வலுவூட்டும் அடிப்படையாக மீன்பிடித் தொழில் மிக முக்கியமானது. 3 விடயங்களைக் கொண்டு அதனை விளக்குக. (4 புள்ளிகள்)




kalvi.lk

kalvi.lk



kalvi.lk



kalvi.lk

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page